# DEPOSITION OF WITNESS
## ( Chapter XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE CHEYYUR

**Calender :**
**Miscellaneous : CC Case No. 228/2020**
**Sessions :**
**Deposition of Witness for :PW6, LW6**

| | |
|---|---|
| Name | டாக்டர். இளஞ்செழியன் |
| Father's/Husband Name | |
| Village | |
| Taluk | |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of** 07.10.2022.

முதல் விசாரணை:-

1. நான் தற்போது செங்கல்பட்டு அரசு மருத்துவமனையில் அவசர சிகிசசை பிரிவில் பணி செய்து வருகிறேன். கடந்த 12.03.2019 ம் தேதி இரவு 10.30 மணிக்கு நான் செங்கல்பட்டு அரசு மருத்துவமனையில் மருத்துவராக பணியில் இருந்தபோது திருவிழாவில் ஏற்பட்ட சண்டையில் காயம்பட்டு சிகிச்சைக்கு வந்த வெங்கடேசன் வயது. 23 த/பெ. வேணு கடுகப்பட்டு கிராமம் என்பவரை பரிசோதனை செய்தததில் இடது கை முட்டி 8 x6 x1 செ.,மீ கிழிந்த காயமும், அதன் அருகிலே 3 கண்ணாடி துகள்களும் இருந்தது.

2. இடது கைக்கான ரத்த ஓட்டமும் நரம்பும் பாதித்திருந்தது. அவருக்கு முதலுதவி அவரை உள்நோயாளியாக அனுமதித்தேன். நான் மேற்கொண்ட சிகிட்சையின் அடிப்படையில் அவருக்கு விபத்து பதிவேடு வழங்கினேன். (நான் வழங்கிய **விபத்து பதிவேடு அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

3. காயம் பட்ட நபர் 108 ஆம்புளன்சில் எடுத்து வரப்பட்டார். அவருடன் யாரேனும் வந்தார்களா என்று எனக்கு சரியாக நினைவு இல்லை. அவர் வரும் போது போலிஸ் மெமோவுடன் வந்தார். காயம் பட்ட நபர் சுயநினைவுடன் இருந்தார். மேலும் தன்னை தெரந்த நபர்கள் கத்தியாளும்

, பாட்டிலாலும் தாக்கியதாக சொன்னார்.

4. திருவிழா கூட் நெரிசலில் தவறி கட்டி வைத்திருந்த டியூப்லைட் மீது விழுந்து மேற்சொன்ன காயங்கள் ஏற்பட வாய்ப்பு உள்ளதா என்றால் வாய்ப்பு உள்ளது.

(இத்துடன் குறுக்கு விசாரனை முடித்துக்கொள்ளப்படுகிறது)

**மறு விசாரணை**

இல்லை

Signature of Witness

Taken down before me in open court, read over to the witness and admitted by the deponent to be correct.

Sd/Tmt.N.Preethi,
District Munsif Cum Judicial Magistrate
Cheyyur.